Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead of life

# NOTICE

## TAMILNAD MERCANTILE BANK LIMITED.,

REGD OFFICE, 57, V.E.ROAD, THOOTHUKUDI-628002

# பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

**வங்கி ஈக்விட்டி பங்குகளை (உரிமை கோரப்படாத) முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியம் (IEPF) ஆணையத்திற்கு மாற்றம் செய்தல் – சம்பந்தமாக.**

கம்பெனி சட்டம் 2013, பிரிவு 124(6)–ன்படி இந்த அறிவிப்பானது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியால் அதன் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியம் IEPF ஆணையம் கணக்கு, (ஆடிட் பரிமாற்றம் மற்றும் பணத்தை திரும்பப் பெறுதல்) விதிகள், 2016 (''விதிகள்'')–படி, பங்குகுளை பொறுத்தவரை, ஏழு தொடர்ச்சியான ஆண்டுகளுக்கு ஒரு ஈவுத்தொகை (Dividend) கூட ஏற்கப்படாத மற்றும் பங்குதாரர்களால் பணமாக மாற்றப்படாத நிலையில் உள்ள ஈவுதொகைகளுக்கு உண்டான வங்கி பங்குகளை, மத்திய அரசினால் நிறுவப்பட்ட IEPF கணக்கிற்கு வங்கியால் மாற்றப்பட உள்ளது.

எந்த பங்குதாரர்கள் தனது பங்குகளுக்கு உண்டான ஈவுதொகையினை தொடர்ச்சியான ஏழு ஆண்டுகளுக்கு பணமாக மாற்றாமல் வைத்துள்ளாரோ, அத்தகைய பங்குகளை IEPF கணக்கிற்கு மாற்றுவதற்கு பொறுப்பாளராக கருதப்பட்டு அவர்களின் பங்குகளை மாற்றம் செய்ய வங்கியானது நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அத்தகைய பங்குதாரர்களின் விபரங்களை வங்கியானது தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது (www.tmb.in)

மேற்சொன்ன விதிகளின்படி, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு வங்கியானது தனிப்பட்ட தகவல் தொடர்பினை அனுப்பி, சம்பந்தப்பட்ட பங்குகள் IEPF கணக்கிற்கு மாற்றுவதற்கு முன்னர், பங்குகளை கோருவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் தேவையான ஆவணங்களை, செக்கரேட்டேரியல் செக்சன், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி (தூத்துக்குடி தலைமையகம்)–க்கு மேற்சொன்ன தகவல் தொடர்பு கடிதத்தில் கூறியுள்ளதுபடி தங்களது பங்குகளின் மீது உரிமைகோருவதற்கு ஏதுவாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு எந்தவித தகவல் தொடர்பும், ஆவணங்களும் பங்குதாரர்களால் சமர்ப்பிக்கப்படாமல், உரிமை கோரப்படாத நிலையில் உள்ள பங்குகளை, வங்கியானது மேற்கொண்டு எந்தவித தகவல்களையும் இதுதொடர்பாக பங்குதாரர்களுக்கு தெரிவிக்காமல், சம்பந்தப்பட்ட கோரப்படாத பங்குகளை IEPF கணக்கிற்கு விதிகளின்படி மாற்றும் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று பங்குதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறும் பங்குதாரர்கள் தங்களின் பங்குகளை பங்கு சான்றிதழ்களாக வைத்திருந்தாலும், அத்தகைய பங்குகள் IEPF – ஆணையத்திற்கு மாற்றம் செய்யப்படும் பட்சத்தில், பங்குதாரர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட அசல் பங்கு சான்றிதழ்(கள்) தானாக ரத்து செய்யப்பட்டு, மாற்றம் செய்வதற்கு ஏற்புடையதாகக் கருதப்படாது.

குறிப்பிட்ட பங்குதாரர்கள், தங்களது ஈவுத்தொகை வாரண்ட்களை ஏற்காத/பணமாக மாற்றுவதற்கு கோரப்படாத ஈவுத்தொகையினை வருகின்ற 25–ம் தேதி, அக்டோபர் மாதம் 2017–ம் ஆண்டுக்குள் பணமாக மாற்றாதபட்சத்தில், வங்கியானது விதிமுறைகளின்படி, பங்குகளை IEPF ஆணையத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இதுதொடர்பாக மேற்கொண்டு எந்தவித தகவல்களையும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு பங்குதாரர்களின் பங்குகளை மாற்றுவதற்கு வங்கியானது எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

இவ்வாறு IEPF ஆணையத்திற்கு மாற்றப்படும் பங்குகளுடன் சேர்ந்து, அப்பங்குகளுக்கு உண்டான அனைத்து நன்மைகளும், ஈவுத்தொகை உட்பட மாற்றம் செய்யப்பட்டுவிடும். இந்த பங்குகளை அல்லது அதன் பலன்களை, குறிப்பிட்ட பங்குதாரர் திரும்ப கோரும் பொருட்டு, தனிப்பட்ட விண்ணப்பமான IEPF-5 மூலமாக விதிகளில் கூறியுள்ளபடி IEPF ஆணையத்திடம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள முடியும். மேற்கூறிய அனைத்தும் IEPF இணையதளமான www.iepf.gov.in–ல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு தொடர்பான, எந்தவொரு தகவல் / விளக்கத்திற்காகவும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிமிடெட், செக்கரேட்டேரியல் செக்சன் தலைமை அலுவலகம், எண் : 57, V.E. சாலை, தூத்துக்குடி–628002, தொலைபேசி எண்: 0461–2325136, மின்னஞ்சல் முகவரி: shareholders@tmbank.in–ல் தொடர்பு கொண்டு விளக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

தேதி : 03/10/2017
இடம் : தூத்துக்குடி

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கிக்காக**
**பிரகாஷ் சந்திர பாண்டா**
**கம்பெனி செக்ரேட்டரி**
**ACS : 22585**